DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.59/2026

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | கோகுல் (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 14.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், பளையபாளையத்தில் குடியிருந்து வங்கியில் வேலைசெய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது அப்பா ஆவார்.

கடந்த 30.11.2025ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு நானும் எனது அம்மாவும் இவ்விபத்தில் இறந்துபோன எனது பாட்டி மாராயி என்பவரும் மற்றும் ஆஜர் எதிரியான எனது அப்பாவும் எனது நெருங்கிய உறவினரின் திருமணத்திற்காக புதுச்சத்திரம் செல்லவேண்டி எதிரி காரை ஓட்ட எனது அம்மாவும் எனது பாட்டியும் பின்னால் அமர்ந்து கொண்டும், நான் முன் இருக்கையில் அமர்ந்து கொண்டும் சென்று கொண்டிருந்தபோது நாங்கள் தூங்கிவிட்டோம். திடீர் என்று சத்தம் கேட்டு விழித்து பார்த்தபோது சேந்தமங்கலம் டு அலங்காநத்தம் மெயின்ரோட்டிற்கு அருகில் உள்ள ஆலமரத்திற்கு அருகில் உள்ள பள்ளத்தில் எங்களது கார் கவிழ்ந்து இருந்தது. அருகில் இருந்தவர்கள் எங்களை மீட்டார்கள். எனது அம்மாவிற்கு இடது கண்ணில் அடிபட்டிருந்தது. எனக்கும் எனது அப்பாவிற்கும் எவ்வித அடியும் படவில்லை. எனது பாட்டி நெஞ்சுவலியால் துடித்து கொண்டிருந்தார். உடனே நாங்கள் அனைவரும் 108

ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் டு திருச்சி சாலையில் உள்ள ஸ்ரீதர்ஷன் மருத்துவமனைக்கு எனது பாட்டியை அழைத்து சென்றோம். எனது பாட்டி அங்கு மயக்கமடைந்துவிட்டதால் மேல் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு மருத்துவர்கள் எனது பாட்டியை பரிசோதித்துவிட்டு அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறினார்கள். பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் போலிசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தபோது கடந்த 30.11.2025ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு நானும் எனது அம்மாவும் இவ்விபத்தில் இறந்துபோன எனது பாட்டி மாராயி என்பவரும் மற்றும் ஆஜர் எதிரியான எனது அப்பாவும் எனது நெருங்கிய உறவினரின் திருமணத்திற்காக புதுச்சத்திரம் செல்லவேண்டி எதிரி காரை ஓட்ட எனது அம்மாவும் எனது பாட்டியும் பின்னால் அமர்ந்துகொண்டும், நான் முன் இருக்கையில் அமர்ந்து கொண்டும் சென்று கொண்டிருந்தபோது எனது அப்பா கவனக்குறைவாக வண்டியை ஓட்டியதால், வாகனம் கட்டுப்பாட்டை இழந்து நிலைதடுமாறி பள்ளத்தல் விழுந்து விபத்து ஏற்பட்டதாகவும், மேற்படி விபத்தில் எனது பாட்டிக்கு நெஞ்சு வலி ஏற்பட்டு இறந்துவிட்டதாகவும் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரி எனது அப்பா என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> இல்லை

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

| |
|---|
| **Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**<br><br>**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**<br>**Judicial Magistrate,**<br>**Sendamangalam** |